பக்கங்கள் 18+ 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 19 வியாழக்கிழமை 03.07.2024 | அதிர்வு 334

## கம்பஹாவில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

(க.மகாதேவன்)



கம்பஹா மாவட்டம், கந்தானையில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணிப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## அநுர அரசு வலியுறுத்து



யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04

## வவுனியாவில் மனைவி, மாமியாரைக் கத்தியால் குத்திய குடும்பஸ்தர் வீட்டின் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியா, சமயபுரம் பகுதியில் தனது மனைவியையும், மனைவியின் தாயாரையும் கத்தியால் குத்திக் காயப்படுத்திய குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சமயபுரம் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் 04





### மன்னார் கடற்பரப்பில் கைதான

# தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

(ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்)

இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டு தமிழக மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது

கடந்த 29 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழகம் - இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரினுடைய வழக்கு இன்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

வழக்கை விசாரித்த மன்னார் மாவட்ட நீதிவான், இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த 29 ஆம் திகதி இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இயேசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் மேற்படி 8 மீனவர்களும் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந் தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்,

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23 படகுகளுடன் 174 தமிழக மீனவர்கள் கைதாகியுள்ளனர்.

# மேர்வின் உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிப்பு!



கிரிபத்கொட பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங் களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள் ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரும் கம்பஹா மேலதிக நீதவான் டபிள்யூ கே டி விஜேரத்ன முன்னிலையில் இன்று ஆஜர்படுத் தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவ ணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிக ளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## கம்பஹாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில், காரில் இருந்த ஆண்கள் இருவரை இலக்கு வைத்து இன்று காலை இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந் துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவத்தில் படுகா யமடைந்த மற்றைய நபர் மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமர வீரவின் பிரத்தியேகச் செயலாளராகப் பணியாற்றிய சமீரா மனஹார என்பது குறிப்பிடத்தக்கது.




# வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மைதானத்துக்குக் காணி

## பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கி.வசந்தன்)

வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்துக்கான காணி வழங்குவதற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை மாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், "வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரிக்கு விவசாயக் காணியை மைதானத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் அதனை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. காணி ஆணை யாளருக்கும் விடுவித்து தருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச செயலக மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதனை விடுக்கத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்." – என்று கோரினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தக் காணியை வழங்கத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

### கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர்

# வேளமாலிகிதனைக் கட்சியிலிருந்து நீக்குவதற்குத் தமிழரசு பரிசீலனை!

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேளமாலிகிதனை கட்சியில் இருந்து நீக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்துள்ளது.

கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஜீவராசா என்பவர் அடங்கலாக வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தமை தொடர்பில் ஒரு வார காலத்தினுள் விளக்கம் கோரி கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் வேளமாலிகிதனுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த விளக்கம் கோரல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"கடந்த 19.06.2025 அன்று தாங்களும் இன்னும் மூவரும் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து உரையாடியதாக அறியக் கிடைத்தது. அந்த மூவரில் ஒருவர் அண்மையில் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட ஜீவராசா என்றும் அறியக் கிடைத்தது. இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சிக்கு எதிராகச் சுயேச்சையாகப் போட்டியிட்டவர். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமக்கு எதிராகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர் என்பதும் நீங்கள் நன்கு அறிந்த விடயங்கள்.

வெளிப்படையாகவே கட்சிக்கு எதிராகச் செயற்படும் ஒருவர் உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்றில் உங்களுடன் சேர்ந்து கலந்துகொள்வதும் அது பகிரங்க செய்தியாக வெளிவருவதும் கட்சி நலனை வெகுவாகப் பாதிக்கும் என்பது தாங்கள் அறிந்திருக்க வேண்டியதொன்று.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தங்களுக்குப் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்க முன்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தீர்மானத்துக்கு மாறாகச் செயற்பட்டமைக்குத் தாங்கள் மன்னிப்பு கோரியதோடு எதிர்காலத்தில் இப்படியான குற்றத்தைச் செய்தால் எவ்வித விசாரணையும் இன்றி கட்சியில் இருந்தும் கட்சி சார்பில் வகிக்கும் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவதற்கு உங்களது ஒப்புதலை வழங்கியுள்ளீர்கள்.

ஆகவே ஜீவராஜா போன்ற ஒருவரை ஆளுநரைச் சந்திக்கச் சென்ற உத்தியோகபூர்வ குழுவில் சேர்த்துக்கொண்ட குற்றத்துக்காக நீங்கள் ஏன் கட்சியில் இருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டி ஒரு வார காலத்துக்குள் எழுத்து மூலம் எனக்குப் பதில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இல்லையெனில் அல்லது திருப்திகரமான பதில் அளிக்காவிட்டால் நீங்கள் கட்சியில் இருந்து உடனடியாக நீக்கப்படுவீர்கள் என்பதை இத்தால் தங்களுக்கு அறியத் தருகின்றேன்." – என்றுள்ளது.



# இ.போ.ச. பஸ் விபத்து!

## 15 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

கண்டி, வத்தேகம, அரலிய உயன பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்று வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வத்தேகமவில் இருந்து குடுகல நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பஸ்ஸில் 25 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களில் 15 பேர் காயமடைந்து வத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் வத்தேகம பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, சமயபுரம் பகுதியில் உள்ள வீட்டுக்கு இரவு வருகை தந்த உயிரிழந்த நபர் வீட்டில் இருந்த பெண்ணையும் அவரது தாயாரையும் கத்தியால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த இரு பெண்களும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இந்தக் குற்றச் செயலைப் புரிந்துள்ள சந்தேகநபரான குடும்பஸ்தர் அந்த வீட்டின் கிணற்றில் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

அவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்தாரா அல்லது வேறு ஏதும் குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதா என்பது தொடர்பாக பொலிஸாரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, உயிரிழந்த குடும்பஸ்தரும், படுகாயமடைந்த பெண்ணும் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளதுடன் அவர்கள் இருவரும் கணவன், மனைவியாகக் கடந்த ஒரு வருட காலமாக சமயபுரம் பகுதியில் வசித்து வந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் இருவரும் ஏற்கனவே வெவ்வேறு திருமணங்களை முடித்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் வசந்தி (வயது30), அவரது தாயாரான இந்திரா (வயது 69) என்ற இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கிருஷ்ணகுமார் (வயது 45) என்ற நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கடந்த ஜுன் 29 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற்றது. அரச தரப்பில் இருந்து சி.ஐ.டி. மற்றும் நீதி அமைச்சால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். தேவையான சாட்சிகள் முன்வைக்கப்படும். இந்த மனிதப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும். வழக்கு விசாரணை இடம்பெறுவதால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது.” - என்றார்.




# பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே கால்நடை வைத்தியர்களது சேவை

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

கால்நடை வைத்தியர்கள் மாத்திரமல்ல அனைத்துத் துறையினரும் பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில்தான் தங்கள் சேவைகளை முன்னெடுக்கின்றார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். இடர்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு தேவையான உங்கள் சேவைகள் தொடர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த மாநாடு வலம்புரி ஹோட்டலில் நேற்று புதன்கிழமை (02) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

வட மாகாணம் கால்நடை உற்பத்தித் துறைக்கு சிறப்பான ஆற்றலைக் கொண்டுள்ளது. எங்களது விவசாயிகள் தங்கள் வாழ்க்கைக்கு அதைச் சார்ந்துள்ளனர். உங்கள் பணி உண்மையிலேயே விலைமதிப்பற்றது. சவால்கள் மற்றும் குறைபாடுகளை எதிர்கொண்டு, நீங்கள் வடக்கு மாகாணத்துக்கு விதிவிலக்கான சேவையைத் தொடர்ந்து வழங்குகிறீர்கள். கால்நடைகளின் நலனுக்கான உங்கள் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது.

நீங்கள் கால்நடைகள் மீது பச்சாதாபமும் கருணையும் கொண்டவராக இருக்க வேண்டும். 'ஜீவ காருண்யம்' என்பது அனைத்து மதங்களிலும் ஒரு அடிப்படைக் கொள்கையாகும். பெரும்பாலும் அந்தச்சேவை சரியான நேரத்தில் கிடைப்பதை ஒரு தடையாக நாம் எதிர்கொள்கிறோம். எதிர்காலத்தில் இந்த சவால்களை நாம் சமாளித்து, வடக்கு விவசாயிகள் மற்றும் குடும்பங்களுக்கு செலவு குறைந்த, விரைவான, மலிவு விலையில் சேவையை வழங்க முடியும் என்று நம்புகிறோம்.

அத்துடன், கட்டாக்காலி நாய்கள் கட்டுப்பாடு மற்றும் ரேபிஸ் தடுப்பூசி கட்டுப்பாடு போன்ற முக்கியமான சிறப்புத் திட்டங்களுக்கான உங்கள் ஆதரவு, பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான உங்கள் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.- என்றார்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எது இனவாதம்?

வடக்கில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணியைக் கையகப்படுத்தும் வர்த்தமானியை சட்டப்பூர்வமாக்குவதற்கு முன்பு உயர்நீதிமன்றத்தில் அதற்கு சுமந்திரன் தடையுத்தரவைப் பெற்றமையைக் கடுமையாக விமர்சித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, 'இனவாத கருத்துக்களால்' வர்த்தமானி இடைநிறுத்தப்பட்டதாக யாழ்ப்பாணத்தில் ஒரு செவ்வியில் கூறியிருக்கிறார்.

இந்தக் கூற்று, இந்தக் காணி கபளீகரம் செய்யும் அரசின் முயற்சியில் உயர் நீதிமன்றம் தலையிட்டுத் தடை உத்தரவு வழங்கத் தவறி இருந்தால், அந்த வர்த்தமானி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் என்ற சந்தேகத்தை இப்போது உறுதியாக்கியிருக்கின்றது.

95 வருடங்களுக்கு முன்னர் அப்போதைய தேவைக்காக - அச்சமயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட காணிப் பதிவு நடவடிக்கைகள் ஓரளவு பூர்த்தியான கட்டத்தில், எஞ்சியிருக்கும் காணிகளை கண்டுபிடிப்பதற்காக கொண்டுவரப்பட்ட - காணி நிர்ணய சட்டத்தை, இப்போது வடக்கில் மாத்திரம் பிரயோகிக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு. தெற்கிலோ, கொழும்பிலோ இத்தகைய சட்டத்தை பிரயோகித்து மக்களின் காணிகளை கபளீகரம் செய்யும் எந்த அறிவித்தலும் அண்மைக் காலத்தில் வந்ததாக இல்லை. அப்படி இருக்கையில், எப்போதோ ஒழித்திருக்க வேண்டிய சட்டத்தைக் கிளறி எடுத்துக் கொண்டு வந்து, வடக்கில் மாத்திரம் இந்தச் சட்டத்தை விசேடமாகப் பயன்படுத்தி, மக்களின் காணிகளை சுருட்டுவதற்கு அரசு எடுத்த முயற்சியை, அரசின் இனவாதச் செயற்பாடு என்ற அடிப்படையில் நோக்கி, அதற்கு எதிராக நீதிமன்றப் பாதுகாப்பை கேட்டது தவறா?

கடந்த 75 ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராக, அரச பயங்கரவாதத்துக்கு எதிராக, போராடி வருகிறார்கள். ஆனால் அந்த அடக்குமுறையாளர்கள் தமிழ் மக்களின் தற்காப்புக்கான எதிர்ப்புப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகவும், தம்மை பாதுகாப்பதற்காகத் தமிழ் மக்கள் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளை இனவாதமாகவும் காட்ட முயற்சித்து வருகின்றனர். அதுவே கடந்த 40 - 50 ஆண்டுகால இலங்கையின் வரலாறாக வெளிப்பட்டிருக்கின்றது.

அந்த வேலையைத்தான் இப்போது அமைச்சர் பிமல் ரத்நாயக்காவும் தொடர்ந்து முன்னெடுக்கின்றார்.

தமிழ் மக்களின் காணிகளை இனவாத நோக்கோடு பௌத்த - சிங்களப் பேரினவாத அரசு கபளீகரம் செய்யும் நடவடிக்கையை நீதிமன்றம் மூலம் - சட்டத்தின் வாயிலாக - தடுக்க முயன்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முயற்சியை அவர் இனவாதக் கருத்துக்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்று விமர்சிப்பது அபத்தமானது.

அது மாத்திரமல்ல, அத்தகைய காணி அபகரிப்பு நடவடிக்கையை நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு மூலம் தடுத்திருக்கின்ற போது, இனவாதக் கருத்துக்களினால் அந்தக் கபளீகர நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது என்று அமைச்சர் கூறுவது, இனவாதத்துக்கு இசைந்து - அதற்கு இணங்கி - உயர் நீதிமன்றம் செயற்பட்டுள்ளது என்ற அர்த்தத்தையும் அவர் தருவதாகக் கொள்ள முடியும்.

அரசின் இந்தக் காணிக் கபளீகர நடவடிக்கையை உயர் நீதிமன்றம் மூலம் தடுப்பதற்கு தமிழர்கள் முயற்சி எடுத்து இருக்காவிட்டால், முந்தைய அரசுகளின் இன அடக்கு முறை நடவடிக்கை போல இந்தக் காணி அபகரிப்பு நடவடிக்கையும் வெற்றிகரமாக முன்நகர்ந்திருக்கும்.

இப்போதும் கூட உயர் நீதிமன்ற உத்தரவினாலும் அதன் அடிப்படையில் வர்த்தமானியை அரசு கைவாங்கிய பின்புலத்திலும், இப்படி தமிழர் தாயகக் காணிகளை அபகரிக்கும் பேரினவாத அரசுகளின் அடாவடித்தன நடவடிக்கை முடிவுக்கு வந்துவிட்டது என்று கருதுவதற்கு இடமில்லை.

முன்னைய வர்த்தமானியை கைவாங்கி, அரசு வெளியிட்டிருக்கும் புதிய வர்த்தமானி அறிவிப்பின் வாசகங்களைப் பார்க்கும் போது இந்தக் காணிக் கபளீகர நடவடிக்கை மீண்டும் புதிய வடிவத்தில் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்ற சந்தேகத்தையே அது தந்து நிற்கின்றது.

# ஊடகவியலாளர் மீது அட்டாளைச்சேனையில் நேற்றிரவு தாக்குதல் எனப் பொலிஸில் புகார்

(நூருல் ஹுதா உமர்)

ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் மீது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா மசூர் என்பவர் தலைமையிலான குழு ஒன்று நேற்று இரவு தாக்குதல் நடத்தியதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் மப்றூக் நேற்றிரவு அட்டாளைச்சேனை பொது மைதானத்துக்கு அருகில் பேசிக் கொண்டிருந்த போது, அங்கு காரில் வந்த அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா என்பவரும், இன்னுமிருவரும் மப்றூக் மீது எதிர்பாராத விதமாக தாக்குதல் நடத்தினர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"என்னைப் பற்றி எப்படி நீ செய்தி எழுதுவாய்?" எனக் கேட்டவாறே, மப்றூக் மீது றியா மசூர் என்பவர் தாக்குதல் நடத்தினார் என தனது பொலிஸ் முறைப்பாட்டில் ஊடகவியலாளர் மப்றூக் கூறியுள்ளார்.

றியா மசூர் மற்றும் அவருடன் வந்தவர்கள் மது அருந்தியிருந்தனர் எனவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றியா மசூர் அழைத்து வந்தவர்களுக்கு எதிராக, ஏற்கனவே பொதுமக்களைத் தாக்கியமை மற்றும் போதைவஸ்து பாவனை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் உள்ளன எனவும் கூறப்படுகிறது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் உள்ளிட்ட தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் பேசிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இதன்போது அங்கிருந்தவர்கள் தாக்குதலை தடுத்து நிறுத்தினர் எனவும், இல்லா விட்டால் ஊடகவியலாளருக்கு மேற்படி குழுவினர் உயிராபத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தாக்குதலை மேற்கொண்ட றியா மசூர் என்பவர், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து விட்டுச் சென்றார் எனவும், ஊடகவியலாளர் மப்றூக் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.



# எல்டப் தோட்ட பெண் தொழிலாளருக்கு இடையில் கொழுந்து பறிக்கும் போட்டி

(நடராஜா மலர்வேந்தன்)

மடுல்சிமை பெருந்தோட்ட நிறுவனத்தினத்துக்கு உட்பட்ட எல்டப் தோட்ட பிரிவு பெண்தொழிலாளர்களுக்கு இடையில் கொழுந்து பறிக்கும் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலாமிடத்தை எல்டெப் பிரிவைச் சேர்ந்த சுசிலாவும் இரண்டாமிடத்தை கிக்கிரிவத்தை பிரிவைச் சேர்ந்த அன்னக்கிளி, டைனாவத்தை பிரிவைச் சேர்ந்த புனிதவதி ஆகியோரும் பெற்றனர்.



வெற்றியாளர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர். அத்தோடு குளிர்சாதனப் பெட்டியும், வர்ண தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு அடுப்பும் ஆகியனவும் பரிசாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவன பொது முகாமையாளர் சுதந்த விஜயரத்ன, எல்டெப் தோட்ட முகாமையாளர் மேர்வின் ரத்னதாசன், உதவி முகாமையாளர்கள் அசித பெரேரா, சமில்க மதுஷங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# கொழும்பு கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம்

கொழும்பு – 13, கதிரேசன் வீதி, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற வுள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று புதன் கிழமை காலை மஹா கணபதி ஹோமத்துடன் கிரிகைகள் மயிலாடு துறை வேத சிகாமணி சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார் முன்னி லையில், சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றன.












# தேர்தல் மூலோபாயத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கொழும்பில்

(ஹஸ்பர் ஏ.எச்.)

2026 - 2029 ஆண்டுக்கான தேர்தல் மூலோபாயத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்ட கலந்துரையாடல் நேற்று (02) தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வஜன வாக்குரிமை என்பது மக்களின் உரிமையாகும். அந்த உரிமையை பாதுகாப்பதே இவ்வாறான மூலோபாய விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமாகும்.

மக்களின் கருத்துக்களைப் பெற்று, அடுத்து வரும் தேர்தலை நீதியானதாகவும் சுதந்திரமானதாகவும் நடத்துவது எமது கடமையாகும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதன்போது தெரிவித்தார்.

இந்த நாட்டில், வெகுசனங்களோடு, தொடர்பாடல் செய்வதும், மிகப்பெரிய நிகழ்வுகளை நடத்துவதும், இலங்கை தேர்தல்கள் திணைக்களம் மட்டுமேயாகும்.

வர்த்தக நோக்கத்தோடோ, போட்டி தன்மையோடோ இயங்காமல், முழுக்க முழுக்க மக்கள் சேவைகளை அடிப்படையாகக் கொண்டு, இயங்குவதுதான் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவாகும் என மேலும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு, செயல்பாட்டின் விளக்கம், 2026-2029 மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், அதன் செயல்பாடுகள் பங்குதாரர்களுக்கு எவ்வாறு பொருத்தமானவை மற்றும் முன்னேற்றம் குறித்த கருத்துக்களை வழங்குதல், மற்றும் 2026 - 2029 திட்டத்தைத் தயாரிப்பதற்கான செயல்முறை போன்ற பல விடயங்கள் இதன் போது தெளிவூட்டப்பட்டன. கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தேர் தல்கள் ஆணையாளர் நாயகத்தால் தக்க பதிலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார, மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.கே. டி. நெரஞ்சன், அரச உயரதிகாரிகள், மகளிர் சங்கச் செயற்பாட்டாளர்கள், இளைஞர் சங்க செயற்பாட்டாளர்கள், மீனவர் சங்க செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# உடப்புக் கரையோரப் பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்ரிக் மூலப்பொருள்

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம், உடப்பு கிராம கரையோரப் பகுதியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு மூலப்பொருள்கள் இன்று (03) அதிகாலை தொடக்கம் கரை ஒதுங்கி வருகின்றன.

தற்போது வீசும் தென்மேல் பருவக் காற்றின் வேகத்தில் இவை மணி போன்ற வெள்ளை நிற வடிவில் கரை ஒதுங்குகின்றன.

இவை மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்றும் சிறுவர்கள் விளையாட்டாக இதனை எடுத்துப் பார்ப்பது, எடுத்துச் செல்வது மிகவும் ஆபத்தானது எனகவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை மாநகர சுகாதார தொழிலாளர்களுக்கு சீருடை!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்குப் புதிய சீருடை வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (02) மாநகர சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜுன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.எம். டிலிப் நௌசாட், களஞ்சியப் பொறுப்பாளர் என். மகேந்திரராசா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வஜீ உட்பட சுகாதாரப் பிரிவு மேற்பார்வை உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடுகின்ற சுமார் 80 சுகாதாரத் தொழிலாளர்களுக்கு தலா இரண்டு வீதம் புதிய சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை மாநகர சபை தற்போது பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்ற சூழ்நிலைக்கு மத்தியிலும் ஊழியர்களுக்கு கால தாமதமின்றி உரிய தினத்தில் சம்பளம் வழங்குவதிலும் சீருடை போன்ற சலுகைகளை வழங்குவதிலும் மாநகர சபை நிர்வாகமானது கூடிய கரிசனையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மாநகர சபைக்கு உரித்தான வருமானங்களை பொது மக்களிடம் இருந்து சேகரிக்கின்ற விடயத்தில் திண்மக்கழிவகற்றல் சேவையானது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்ற விடயமாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில், திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடுகின்ற சுகாதாரத் தொழிலாளர்கள் அனைவரும் மிகவும் பொறுப்புணர்வுடன் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

# அட்டாளைச்சேனை வியாபார நிலையங்கள் கண்காணிப்பு!



(நவாஸ்)

அட்டாளைச்சேனையில் சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் வியாபார நிலையங்கள் கண்காணிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதன் போது சில்லறைக் கடைகள், ஹொட்டல்கள், தேநீர் சாலைகள் ஆகியவற்றில் பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான பொருள்களை அகற்றப்பட்டன. அத்துடன் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான துண்டுப் பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உணவு, மருத்துவ, சுகாதார பிரிவு மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.



# சாவகச்சேரி உப்புக்கேணிக் குள அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

## கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நகரசபையுடன் சந்திப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கோவில் குடியிருப்புக் கிராமத்தில் அமைந்துள்ள உப்புக் கேணிக் குளத்தின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் நகர சபையின் புதிய தவிசாளர், உப தவிசாளர் மற்றும் செயலாளருடன் கோவில் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.



கடந்த மாரி காலத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக உப்புக் கேணிக் குளத்தைச் சூழவுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அந்தப் பகுதி மக்கள் தமக்கு நிரந்தர தீர்வு வேண்டும் எனக் கோரி ஆளுநர், அரச அதிபர், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச செயலகத்தை அணுகியிருந்தனர்.

இந்த நிலையில் பொது மக்களின் வேண்டுகோள் மற்றும் அரச அதிகாரிகளின் பணிப்புக்கு அமைவாக சாவகச்சேரி நகரசபை தனது 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உப்புக்கேணிக் குளத்தின் மேலதிக நீரை கடத்துவதற்கான வடிகால் அமைக்க 7மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது.

அதன் அடிப்படையில் மாரி காலத்துக்கு முன்னர் மேற்படி நிதியை முறையாகக் குளப் புனரமைப்பு அல்லது வடிகாலமைப்புச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்துமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் த.சுபேசன் மற்றும் செயலாளர் க.தர்ஷன் ஆகியோர் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போது உப்புக்கேணி குள புனரமைப்புப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் உறுதியளித்திருந்தார்.

# கல்வி உதவிக் கொடுப்பனவுகள் அங்கவீனர்களுக்கு வழங்கல்

(நவாஸ்)

தேசிய செயலகம் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கவீனமுற்றவர்களுக்கான கல்வி உதவிக்காக அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவால் 05 பேருக்கு காசோலை கொடுப்பனவு வழங்கப்பட்டது. பிரதேச செயலாளர் ஏ.சி. அகமட் அப்கரால் பிரதேச செயலத்தில் வைத்து நேற்று இவை வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் சமூக சேவைப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.ஆ. மொஹிடீன்மற்றும்சக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# போதைப் பொருள் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை மாணவர்களுக்கு

திருக்கோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கான போதைப் பொருள் விழிப்புணர்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கம் மற்றும் பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் கலையரங்கத்தில் இது நடைபெற்றது.

இந்த நிகழ்வைத் திருகோணமலை விக்கினேஸ்வரா மஹா வித்தியாலத்தின் முன்னாள் மாணவரும் மாநகர சபை உறுப்பினருமான உதயகுமார் அஜித் குமார் மற்றும் அறிவு ஒளி மையத்தின் செயலாளர் ஜீவரத்னம் புகழ்வேந்தன், டிலக்ஷிகா ஆகியோர்; வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாணவர்கள் பயன் பெறும் விதத்தில் நிகழ்வை நடத்தினர்.

# வரலாற்று சிறப்புமிக்க வாலையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் திங்கள்!

ஈழத்து வடபுலத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரில் புகழ்பூத்த திருநெல்வேலி கிழக்கில் ஸ்ரீ சக்கரத்துக்கு என அமைத்த, வாலையம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ வித்யா உபாசகர் சிவஸ்ரீ சந்திர சாந்தரூபக் குருக்கள் தலைமையில் நவகுண்ட பக்ஷமாக எதிர்வரும் விசுவாவசு வருட ஆனி 23 ஆம் நாள் (07) திங்கள்கிழமை காலை 9 மணிக்கு அனுஷ நட்சத்திரத்தில் நிகழவுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.55 மணிக்குக் கிரியா மங்களாரம்பத்துடன் ஆரம்பமானது. மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் நாளை 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மஹா யாகரம்பத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை (04) வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை மாலை 7 மணிவரை நடைபெறும்.

உலகில் ஸ்ரீசக்கரத்துக்கு கோவில்கள் அமைவது அரிது. இலங்கை திருநாட்டில் ஸ்ரீசக்கரத்துக்கு அமைந்த ஒரே ஒரு கோவில் இதுவாகும். இது மன்னன் காலத்துக்கு உரியதாக இருக்கலாம் என்பது ஐதீகம்.

அக்காலத்தில் அதர்மம் பெருகி மக்கள் அவதியுரும் போது அம்மன் பல அவதாரங்கள் எடுத்து மக்களின் அவலங்களைப் போக்கி வந்துள்ளார்.

பூலோக தேவலோகத்தவர்களை காக்க ஒன்பது வயதுச் சிறுமியாக வாலையம்மன் அவதாரம் எடுத்த பாலாம்பிகை தனது சப்த கன்னிகள் துணையுடன் பண்டகாசூரனையும் சித்தர்கள் போற்றும் வாலை சாந்த சொருபியாக 'வாலையம்மன்' ஆக காட்சி தரும் திருத்தலம் தான் வாலையம்மன் கோவில்.

இந்தப் புதிய கோவிலை அமைப்பதற்காக 2011 ஆம் ஆண்டு பழைய கோவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

இந்தக் கோயிலில் எழுந்தருளியாக இருக்கும் வாலையம்மன் ஆலயத்தில் ஸ்ரீ சக்கரம் முக்கியமான கருப் பொருளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீராத நோய் தீர்க்கும், சந்ததி விருத்தி, தானிய விருத்தி சௌபாக்கியம் தரும் இத்திருத்தலத்தின் தல விருட்சமாக சிவலிங்கபூ மரம், வேம்ப மரம் அமைந்துள்ளன.

புதிய ஆலயத்தில் மூலஸ்தானத்தில் பழைமையான ஸ்ரீ சக்கரமும் பெரிய அம்மன் விக்கிரகமும் பிரமாண்டமாகவும், பரிவார தெய்வங்களாக முறையே ஸ்ரீ பால கணபதி, ஸ்ரீ காமாஷி சமேத காமகோடீஸ்வரர், ஸ்ரீ பத்மாவதி தாயார் சமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கடேஸ்வர பெருமாள், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார், ஸ்ரீ கஜவல்லி மஹாவல்லி சமேத ஸ்ரீ ஷண்முகப் பெருமான், ஸ்ரீ அஷ்டலஷ்மிகள், ஸ்ரீ ப்ரத்தியங்கிரா தேவி, ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ நடராஜர் பெருமான், ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ சூரியன், ஸ்ரீ சந்திரன், ஸ்ரீ மஹா வாராஹி, ஸ்ரீ மஹா மாதங்கி, ஸ்ரீ மஹிசாசுரமர்த்தினி, சக்திகளுடன் கூடிய ஸ்ரீ நவக்கிரக அதிசுந்தர விமானங்களுடன் அமைக்கப்பட்ட பரிவாரக் கோவில்களும் விளங்க மேற்கு வீதியிலே ஸ்ரீ பஞ்சகங்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் விளங்க, ஸ்ரீ சக்ரத்தின் சிவசக்தி ஐக்கிய வடிவில் அதிசுந்தர த்ரிதள 'பராபட்டாரிகா' விமானத்தை ஸ்ரீ பாலாம்பிகை கொண்டு விளங்க 'ஸ்ரீ சக்ர ராஜ வாசல்' நவதள மஹா ராஜ கோபுரமும், சதுர்த்துவார கோபுரங்களும் விளங்க நான்கு வீதிகளிலும் நால்வேத புருஷர்களும் நாத வடிவமான மணிகள் கோபுரங்களுடன் விளங்க முதலாம் பிரகாரத்தில் அஷ்டதிக் பாலகர்களும், பதினாறு திதி நித்யைகளும் சாலக்கிரகங்களில் விளங்க 'அதியற்புத மந்திரமய மஹா மண்டபத்தில்' சமஸ்த தேவதைகள் சூழ நவாவரண தேவதையான ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி அமையப் பெற்றுள்ளமை சிறப்பாகும்.

மூலஸ்தானத்தின் இரு பக்கமும் ஸ்ரீ ராஜ மாதங்கிதேவி, ஸ்ரீ மந்திர வராஹிதேவி அமைக்கப்பட்டுள்ளன.

நான்கு வாசல்கள், பெரிய பிரகாரம், அழகிய கோபுரம், நாற்புறமும் சதுர் வேத மூர்த்திகளுடன் கூடிய மணிக்கோபுரம், அழகிய புஸ்கரணி என்று மின்னுகின்றது.

கோயில் திருமதிலில் எங்கும் காண அரிதாக ஸ்ரீ சக்ர தேவதைகளை திதிகளுக்கு உரிய திதி நித்யா தேவதைகளையும் திக் பாலகர்களையும் கூட நாம் இங்கு பார்க்கின்றோம்.

இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தருமாறு வேண்டுகிறோம். தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நிகழும். மண்டலாபிஷேக காலத்தில் உபயகாரர்களாக கலந்து கொள்ள விரும்புவோர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை நவகலச அபிஷேகமும், மாலை ஸ்ரீ சக்ரநவாவரண பூஜையுடன் திருவீதியுலா உற்சவமும் நடைபெறவுள்ளன.




# நல்லுறவுக்கான நினைவாக பஸ் தரிப்பிடம் கற்பிட்டி பள்ளிவாசல்துறையில் திறப்பு!

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் பாலாவியில் உள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகமும், மகளிர் எழுச்சி குரல் அங்கத்தவர்களும் இணைந்து கற்பிட்டி பள்ளிவாசல்துறையில் நல்லுறவுக்கான நினைவாக பஸ் தரிப்பிடம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளர்.

புத்தளம் பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜுவைரியா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரியதர்ஷினி கலந்து கொண்டு பஸ் தரிப்பிடத்தை திறந்து வைத்தார்.

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் மத்திய அரசின் மகளிர் பொறுப்பதிகாரி காந்தி லதா , மாகாண மகளிர் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சிவில் சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளிர் சங்கங்களின் தலைவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டு வட புல மக்களின் பலவந்த வெளியேற்றமானது ஒரு சம்பவமாக இருக்கக்கூடாது இது ஒரு வரலாற்று நிகழ்வாகக் கருதப்பட வேண்டும். எமது எதிர்கால சந்ததிகளுக்கும் கதை கூறுவதற்கான வரலாற்று மூலாதாரமாகவும் அமைய வேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த பஸ் தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சேர்பியா மாணவர் போராட்டங்கள்: நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு!

● **ஐங்கரன் விக்கினேஸ்வரா**

கிழக்கு ஐரோப்பிய நாடான சேர்பியாவில் (ளுநசடியை) முன்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்து மாணவர்கள் தலைமையிலான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இந்த போராட்டங்களில் பல்லா யிரக்கணக்கானோர் திரண்டதால் மோதல்கள் ஏற்பட் டுள்ளன. அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களு டனான மோதல்களில் சேர்பிய பொலிஸார் பலரைக் கைது செய்துள்ளனர்.

**வெளிநாட்டு சக்தி ஊடுருவல்**

250 நாடாளுமன்ற இடங்களில் 156 இடங்களை வென்ற முற்போக்குக் கட்சி தலைமையிலான கூட்ட ணியின் பிரபலமான ஜனாதிபதி வூசிக், செய்தியா ளர்களிடம் கூறுகையில், இந்த போராட்டத்தின் பின்னணியில் குறிப்பிடப்படாத “வெளிநாட்டு சக்திகள்” இருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

போராட்டகாரர்களைப் பொலிஸார் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார். மேலும் அவர்கள் நீதியை எதிர்கொள்வார்கள் என்றும் எச்சரித்தார்.

ஜனாதிபதி வூசிக் முன்னர் திடீர் தேர்தல்களை மறுத்துவிட்டார். மேலும் 2027 இல் முடிவடையும் தனது இரண்டாவது பதவிக்காலத்தைத் தொடர திட்டமிட்டுள்ளார். அப்போது நாடாளுமன்றத் தேர்தல்க ளும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளன.

ஆனால் அவரது அதிகாரத்தில் உள்ள பிடிப்பு பாரியளவில் சீர்குலைந்துள்ளது. எதிரிகளையும் அவரது கூட்டாளிகளையும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்பு படுத்துவதாகவும், போட்டியாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் ஊடக சுதந்திரங்களை அடக்குவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

கடந்த வார போராட்டத்துக்கு முந்தைய நாள்களில், பொலிஸார் சுமார் பல அரச எதிர்ப்பு ஆர்வலர்களைக் கைது செய்து, அரசியலமைப்பு மற்றும் பயங்கரவாதத்தை குறைமதிப்புக்கு உட்படுத்தினர் என்று குற்றம் சாட்டி உள்ளது. ஆனால் அவர்கள் அனைவரும் குற்றச்சாட்டு களை மறுத்துவிட்டனர்.

அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் கூறப்படும் பலரையும் பொலிஸார் கைது செய்தனர். மேலும் குரோஷியாவைச் சேர்ந்த பலருக்கும், மாண்டினீக்ரோ வைச் சேர்ந்த ஒரு நாடக இயக்குநருக்கும் விளக்கமின்றி நாட்டுக்குள் நுழைவதைத் தடை செய்தனர்.

அத்துடன் பேரணிக்காக பெல்கிரேடுக்கு மக்கள் பயணிப்பதைத் தடுக்கும் ஒரு வெளிப்படையான முயற்சியாக, வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் சேர்பியாவின் ரயில்வே நிறுவனம் ரயில் சேவையை நிறுத்தியது என்றும் தெரி விக்கப்படுகிறது.

**ஊழல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்**

சேர்பியாவின் பெல்கிரேடில், ஜனாதிபதி அலெக் சாண்டர் வுசிக்கின் அரசாங்கத்தை உலுக்கிய கிட்டத்தட்ட எட்டு மாதங்களாக தினசரி ஊழல் எதிர்ப்பு ஆர்ப்பாட் டங்களுக்குப் பிறகு, முன்கூட்டியே தேர்தலுக்கு அழுத்தம்

தொடர்ச்சி▼




# சேர்பியா மாணவர் போராட்டங்கள்: நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு!

தொடர்ச்சி▲

கொடுக்கும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பால்கன் நாட்டில் வுசிக்கின் அதிகாரத்தின் மீதான உறுதியான பிடியை உலுக்கிய சேர்பியாவின் பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட எட்டு மாத தொடர்ச்சியான எதிர்ப்புக்குப் பிறகு மீண்டும் போராட்டம் தொடங்கி இருக்கிறது.

தலைநகர் பெல்கிரேடில், விரைவான தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி அலெக்சாண்டர் வுசிக்கின் நீண்டகால அரசை முடிவுக்குக் கொண்டுவரக் கோரி ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சுமார் 140,000 பேர் கலந்து கொண்ட இந்தப் பேரணி, சுதந்திர போராட்டக் கண்காணிப்பாளர், பொதுக் கூட்டங்களின் காப்பகத்தின்படி, மாணவர்கள் தலைமையிலான ஆர்ப்பாட்டங்களில் மிகப்பெரிய ஒன்றாகும்.

### டிரம்ப் மருமகனின் ரியல் எஸ்டேட் திட்டத்துக்கு எதிர்ப்பு

இதேவேளை, அமெரிக்க அதிபர் டிரம்பின் மருமகனின் ரியல் எஸ்டேட் திட்டத்திற்கு எதிராக சேர்பியாவில் ஆயிரக்கணக்கானோர் பேரணியும் நடத்தியுள்ளனர். தலைநகரின் மத்திய ஸ்லாவிஜா சதுக்கத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

கடந்த ஆண்டு வடக்கு நகரமான நோவி சாட்டில் ஒரு ரயில் நிலையத்தின் கூரை இடிந்து விழுந்து 16 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து டிசெம்பரில் மாணவர் போராட்ட நடவடிக்கைகள் தொடங்கின.

இதுவும் அரசின் மீதான விரக்திக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. பல சேர்பியர்கள் இது மாநில உள்கட்டமைப்பு திட்டங்களில் ஊழல் மற்றும் அலட்சியத்தால் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

தொடர் அழுத்தத்தின் காரணமாகவே இந்த ஆண்டு தொடக்கத்தில் பிரதமர் மிலோஸ் வுசெவிக் ராஜினாமா செய்தார். ஆனால் தற்போதும் ஜனாதிபதி வுசிக் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்.

### அரச எதிர்ப்பு பேரணி இராணுவ வீரர்கள்

பெல்கிரேடில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்பு பேரணியில் மாணவர்களுடன் சேர்ந்து சேர்பிய இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் சென்றுள்ளனர். அவர்களும் முன்கூட்டியே தேர்தலுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

பெல்கிராட் அரசின் செயலற்ற தன்மையால் விரக்தியடைந்த மாணவர்கள் மே மாதத்திலிருந்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர். இந்த சூழலில் போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என்பதை மீண்டும் ஒருமுறை காட்டுகிறோம் என்று சட்ட மாணவி ஸ்டீபன் இவாகோவிக் செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

மேலும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நாங்கள் பேரணி நடத்துவோம் என்றும் தெரிவித்தார்.

அரசால் பல தனியார் நிறுவனங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. மேலும் நிறைய ஊழல்கள் நடந்துள்ளன. இதற்கு புதிய தேர்தல்கள்தான் தீர்வு, ஆனால் அவர் ஜவுசிக்ஸ அமைதியாக நடத்தப்பட விரும்புவார் என்று நான் நினைக்கவில்லை, என்று மற்றொரு மாணவர் ராய்ட்டர்ஸிடம் கூறினார்.

ஜூன் 28, 2025 சனிக்கிழமை போராட்டத்துக்கு முன்னதாக, இரவு 9 மணிக்குள் தேர்தல்களை அறிவிக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் வூசிக்குக்கு “இறுதி எச்சரிக்கை” விடுத்தனர். ஆனாலும் அந்தக் கோரிக்கையை அவர் காலக்கெடுவுக்கு முன்பே நிராகரித்தார்.

சுதந்திரத்தை உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியதுடன், போராட்ட கூட்டத்தினரிடம் ஒரு அறிக்கையை வாசித்தனர். சேர்பியர்கள் “சுதந்திரத்தைஉங்கள்கைகளில்எடுத்துக்கொள்ளுங்கள்” என்றும் அவர்களுக்கு “பச்சை விளக்கு” கொடுக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தனர்.

கோரிக்கைகளை நிறைவேற்றவும், அதிகார அதிகரிப்பைத் தடுக்கவும் அதிகாரிகளிடம் அனைத்து வழிமுறைகளும், எல்லா நேரமும் உள்ளன என்று பேரணிக்குப் பிறகு ஏற்பாட்டாளர்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

மாறாக, அவர்கள் குடிமக்களுக்கு எதிராக வன்முறை மற்றும் அடக்குமுறையைத் தேர்ந்தெடுத்தனர். நிலைமையை எந்த தீவிரமயமாக்கலும் அவர்களின் பொறுப்பு என்று அரசை கண்டித்தனர்.

இதேவேளை, ஸ்லாவிஜா சதுக்கத்தில் போராட்டத்துக்குச் சில மணி நேரங்களுக்கு முன்பு, வூசிக்கின் கட்சி உறுப்பினர்கள் நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும், அதன் சொந்த ஆதரவாளர்களை பஸ்களில் அனுப்பினர். பலர் டி-சர்ட்களை அணிந்து “நாங்கள் சேர்பியாவை விட்டுக்கொடுக்க மாட்டோம்” என்று எழுதப்பட்டு இருந்தது.

# அஜித்குமார் குடும்பத்தினருக்கு த.வெ.க. தலைவர் விஜய் ஆறுதல்

பொலிஸார் தாக்குதலில் உயிரிழந்த அஜித்குமார் குடும்பத்தினரை த.வெ.க. தலைவர் விஜய் சந்தித்து 2 லட்சம் ரூபா நிதியுதவி அளித்து ஆறுதல் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரத்தைச் சேர்ந்த பத்திரகாளி கோயில் ஒப்பந்த காவலாளி அஜித்குமார் (வயது 29), இவரை தங்கநகை திருட்டு தொடர்பாக தனிப்படை பொலிஸார் விசாரணையில் தாக்கியதில் ஜூன் 29 ஆம் திகதி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பொலிஸ் நிலைய மரண சம்பவத்தை கண்டித்தும் நீதி கேட்டும் த.வெ.க. சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்தனர். இந் நிலையில், த.வெ.க. தலைவர் விஜய்



மடப்புரத்தில் உள்ள அஜித்குமார் வீட்டுக்குசென்றார்.

அங்கு அவரது தாயார் மாலதி, அவரது சகோதரரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அவர்களிடம் விஜய், "உங்களுக்கு எப்போதும் நாங்கள் துணையிருப்போம். உங்களுக்கான நீதி கிடைக்கும் வரை எங்களது தொடர் ஆதரவை வழங்குவோம். இனிவரும் காலங்களில் காவல் துறை சித்ர வதையில் யாரும் உயிரிழக்காத வகையில் அரசு கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்," என்று ஆறுதல் கூறினார்.

த.வெ.க. பொதுச் செயலாளர் ஆனந்த் உடனிருந்தார். அப்போது அஜித்குமார் குடும்பத்துக்கு 2 லட்சம் ரூபா நிதி உதவி அளித்தார். இரவு 7.50 மணிக்கு சென்றுள்ளார். ஆறுதல் கூறி நிதியுதவி அளித்துவிட்டு இரவு 7.53 மணிக்கு மடப்புரத்திலிருந்து புறப்பட்டார்.

இதுகுறித்து அஜித்குமாரின் தாயார் கூறுகையில், "விஜய் எங்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, தங்களது மகனின் இழப்பு பெரிய இழப்பு. எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் ஈடுசெய்ய முடியாது. தங்களுக்கு எப்போதும் த.வெ.கவும், நானும் உடனிருப்போம் என்றார்." எனத் தெரிவித்தார்.

# ஐ.என்.எஸ். தமால் போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இணைப்பு

ரஷ்யாவின் கலினின்கிரட் பகுதியில் உள்ள யாந்தர் கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்ற விழாவில் ஐ.என்.எஸ். தமால் என்ற புதிய போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்திய கடற்படை பயன்பாட்டுக்காக போர்க் கப்பல்கள் உள்நாட்டிலும், ரஷ்யாவில் தயாரிக்கப்படுகின்றன.

எதிரி நாட்டு ரேடாரில் சிக்காத துஷில் ரக போர்க்கப்பல்களை ரஷ்யாவில் தயாரிக்க, இந்திய பாதுகாப்புத் துறை ஓர்டர் கொடுத்தது. இதில் பிரம்




மோஸ் ஏவுகணைகள் உட்பட 26 சதவீதம் இந்தியாவில் தயாரிக் கப்பட்ட பாகங்கள் பயன்படுத்தப்பட் டுள்ளன.

இந்த கப்பல் ரஷ்யாவின் கலினின் கிரட் பகுதியில் உள்ள யாந்தர் கப்பல் கட்டும் தளத்தில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின் இந்த இந்த போர்க்கப்பலை இந்திய கடற்படையில் இணைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திய கடற்படையின் மேற்கு மண்டல தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் சஞ்சய் ஜஸ்ஜித் முன்னிலையில் ஐ.என்.எஸ். தமால் கடற்படையில் இணைந்தது. இதில் இந்திய பாதுகாப்புத்துறை, கடற்படை மற்றும் ரஷ்ய கடற்படை அதிகாரிகள் பங் கேற்றனர்.

# தி.மு.க. அரசுக்கு எதிராக விமர்சனம் செய்ய மாட்டேன்

## வைகோ உறுதி



தி.மு.க. அரசுக்கு எதிராக விமர்சனம் செய்ய மாட்டேன் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ திட்ட வட்டமாக தெரிவித்துள்ளார்.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க. தலைமையகத்தில் முதல்வரும் கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலினை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று சந்தித்து பேசினார்.பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"முதல்வர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தமாகத்தான் சந்தித்தேன். ம.தி.மு.கவில் நடைபெற்று வரும் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்பாக அவரிடம் தெரிவித்தேன். இந்த தி.மு.க. அரசுக்கு எதிராக எந்த பிரச்சினையிலும் ஒரு வார்த்தை கூட நான் விமர்சனமாக வைத்த தில்லை, வைக்கவும் மாட்டேன்.

தி.மு.கவுக்குப் பக்கபலமாக இருப்பேன் என முன்னாள் முதல்வர் கருணாநிதியின் இறுதி மூச்சுக்குச் சில நாள்களுக்கு முன்பு அவரிடம் கூறினேன். அதை நேற்று முன்தினம் கூட மேடையில் பேசியிருந்தேன் என முதல்வரிடம் தெரிவித்தேன். இந்துத்துவ சனாதன சக்திகள், திராவிட கொள்கைகளைத் தகர்க்கலாம் என நினைத்தால், இமயமலையைக் கூட அசைக்கலாம் திராவிட இயக்கத்தை ஒன்றும் செய்ய முடியாது.

வாஜ்பாய், அத்வானி ஆகியோர் என்னை மத்திய அமைச்சராக்குகிறோம் என்று சொன்னபோது, நான் முடியாது என்று சொன்னேன். என்னை பொறுத்த வரை கொள்கை என்றால் அதில் உறுதியாக இருப்பேன். எதிர்வரும் தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மையாக வென்று ஆட்சியைப் பிடிக்கும்.

கூட்டணி கட்சிகளின் எம்.எல்.ஏ-க்கள் ஓட்டு இல்லாமல் தி.மு.க. எம்எல்.ஏ-க்களே வாக்கு போட்டு முதல்வரை தேர்ந்தெடுக்கும் வகையில் வெற்றி பெறும். கூட்டணி ஆட்சி என்பது எங்களின் நோக்கம் அல்ல. கூட்டணி ஆட்சியை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எங்களின் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்."- என்றார்.

# பிரித்தானியாவில் நலன்புரிக்கொடுப்பனவு சட்டமூலத்திற்கு ஆளுங்கட்சியில் எதிர்ப்பு

## நிதியமைச்சர் றேச்சல் ரீவ்ஸ் கண்ணீர் சிந்தினார்





பிரித்தானியாவில் தொழிற்கட்சி அரசாங்கம் நடைமுறைப்படுத்த முனைந்த நலன்புரிக்கொடுப்பனவு களை மையப்படுத்தி மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு ஆளுங்கட்சியில் எதிர்ப்பு உருவாகிய நிலையில், இந்த விடயம் நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தின் போது கடுமையாக வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியது.

அந்தவேளை எதிர்க்கட்சித்தலை வர் கெமி படேனோக் இந்த விடயத் தில் பல வினாக்களை எழுப்பியதை அடுத்து நிதியமைச்சர் றேச்சல் ரீவ்ஸ் கண்ணீர் விட்டமை புதிய சர்ச்சை களை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் நிதியமைச்சர் ரீவ்ஸ் பதவியில் இருந்து விலகப்போவதான ஊகங்களை மறுத்துள்ள பிரதமர் பணி யகம் அவர் நிதியமைச்சு பொறுப்பில் நீடிப்பார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் கெமி படேனோக்கின் தொடர்ச்சியான கேள்விகளுக்குப் பின்னர் ரீவ்ஸ் தனது கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தமை பகிரங்க மாக தெரிந்தது.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக ஆளும் தரப்பில் உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்களே வாக் களித்து அதனை தோற்கடிக்கலாம் என்ற அச்சத்தில் இறுதிநேரத்தில் அதில் அவசர மாற்றங்களை செய்து நிதியமைச்சர் நாடாளுமன்ற வாக் கெடுப்புக்கு விட்டமை பிரதமர் கெயர் ஸ்டாமருக்கு சவாலான நிலையை உருவாக்கியுள்ளது.

உட்கட்சியில் இந்த சட்டமூலத் திற்கு எதிராக உருவாகிய கிளர்ச்சி நிலையை தவிர்க்க நிதியமைச்சர் ரேச்சல் ரீவ்ஸும் வேலை மற்றும் ஓய்வூதிய அமைச்சர் லிஸ் கெண்ட லும் இந்த சட்டமூலத்தில் இறுதி நிமிட சலுகைகளை வழங்கிபின்னர். இந்த மசோதா 335 வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்த சட்டமூலத்திற்கு எதிராக 260 வாக்குகள் கிட்டியிருந்தன. இதில் 49 வாககுகள் ஆளும் தொழிற் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளா கும், ஆளுந்தரப்பு உறுப்பினர்களில் 18 பேர் வாக்களிப்பில் பங்கெடுக்க வில்லை.

இந்த நிலையில், நாடாளு மன்றத்தில் இடம்பெற்ற பிரதமரின் கேள்வி நேரத்தின் போது நிதிய மைச்சர் முற்றிலும் பரிதாபகரமான வராக இருப்பதாகவும், அரசாங்கத்தின் திறமையின்மைக்கு அவர் ஒரு மனி தக் கேடயமாக பயன்படுத்தப்படுவதாக எதிர்க்கட்சிதலைவர் கெமி பாடெ னோக் கண்டித்தபோது ரீவ்ஸ் தனது கண்ணகளில் இருந்தவந்த கண்ணீ ரைத் துடைத்த போது துணைத் பிரத மாராக ஏஞ்சலா ரெய்னர், அவருக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறி சமா தானப்படுத்தியுள்ளார்.

நலன்புரிதிட்டங்கள் மீளெடுக்கப் பட்டதால் ஏற்பட்ட நிதிசுமை இடை வெளியை எவ்வாறு சமாளிப்பது என் பது குறித்து இன்னும் உறுதியான திட் டங்கள் எதுவும் இல்லையென்பதால் எதிர்காலத்தில் வரி அதிகரிப்பு இடம் பெறலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

# பாக். முன்னாள் பிரதமர் இம்ரான்கானை சிறையில் கொலை செய்ய சதித்திட்டம்



பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானை சிறையிலேயே படுகொலை செய்ய இராணுவத்தளபதி சதி செய்து வுரவதாகவும் எந்த நேரத்திலும் சிறையி லிருந்து கெட்ட செய்தி வரலாம் என அவரது சகோதரி அலீமா கான் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம்ரான் கானின் பிணை மனுக்கள் வேண்டுமென்றே ஒத்திவைக்கப்படுவதாகவும், தனது சகோதரர் நியாயமான விசாரணை அல்லது நிவாரணம் இல்லாமல், காலவ ரையின்றி சிறையில் வைக்கப்படுவதற்காக சட்ட செயல்முறை தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் சாதாரண கைதிகளுக்கு வழங்கப்படும் அடிப் படை வசதிகள் கூட இம்ரானுக்கு கிடைப்பதில்லை என்றும், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கூட அவரை சந்திக்க மறுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இராணுவ தளபதி முனீர் பாகிஸ்தானில் அறிவிக் கப்படாத இராணுவ ஆட்சியை நடத்தி வருகின்றார் எனவும் இம்ரான் கானை அரசியல் ரீதியாக அழிப்பதற்காக தனிமைப்படுத்தப்படுவதாகவும், சிறையில் சித்திரவதை செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். மேலும் எந்த நேரத்திலும் சிறையிலிருந்து கெட்ட செய்தி வரலாம் என்று அஞ்சுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு
வியாழக்கிழமை | 03/07/2025

## டொரோண்டோவில் வெப்பம் அதிகரிப்பு

டொரோண்டோவில் 30 பாகை செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும் என கானடாவின் தேசிய வானிலை நிலையமான சுற்றாடல் திணைக்களம் எதிர்வுகூறியுள் 03



# புலம்பெயர்தல் கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு பிரிட்டிஷ் கொலம்பியா வணிகர்கள் கோரிக்கை

**வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள உள்ளூர் சமூகத் தலைவர்கள், புலம்பெயர்தல் கட்டுப்பாடுகள் தங்கள் வணிகத்தை அச்சுறுத்துவதாகக் கூறி, தொழிலாளர் நெருக்கடியைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசைக் கோரியுள்ளார்கள்.**

**கனடாவின் மூன்றாவது பெரிய துறைமுகம் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள பிரின்ஸ் ரூபர்ட் நகரில்தான் உள்ளது.**

**ஆனால், புலம்பெயர்தல் மற்றும் பணி அனுமதி கொள்கைகளில் கனடா அரசு மேற்கொண்ட மாற்றங்களால், 14,000 பேர் வசிக்கும் அந்நகரத்தின் உள்ளூர் பொருளாதாரம் ஆபத்தில் உள்ளது என்கிறார்** Community Futures Development Corporation **என்னும் அமைப் பின் நிர்வாக இயக்குனரான ஜான் ஃபாரெல்.**

அரசின் இரண்டு கட்டுப்பாடுகளால் தங்கள் நகர தொழில்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கிறார். ஒன்று, தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் (TFW). இரண்டு சர்வதேச மாணவர்கள் மீதான கட்டுப் பாடுகள்.

அதாவது, தனது உணவகத்தின் 90 சதவீத பணியாளர்களும் இந்த திட்டங்கள் மூலமாகத்தான் தன்னிடம் பணியாற்றுவதாக தெரிவிக்கும் ஜான், அரசு இந்த தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் மற்றும் சர்வதேச மாணவர்கள் மீது விதித்த கட்டுப்பாடுகளால் தங்கள் வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்.

அவரைப்போலவே வேலைக்கு இந்த தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களை நம்பியிருக்கும் மற்ற வணிக உரிமையாளர்களும், எங்கள் வணிகம் ஒரே இரவில் மறைந்துவிடும், எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும் அவர்களுக்குத் தேவையான சேவையை வழங்கத் தேவையான ஆட்கள் இல்லையென்றால் ஏமாற்றமடைவார்கள் என்கிறார்கள்.

அரசு இந்தக் கொள்கைகள் தொடர்பில் சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால், உண்மையில் எங்கள் நகரம் நிலைகுலைந்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகவே, புலம்பெயர்தல் மற்றும் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் ஆகிய கொள்கைகளின் தாக்கத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதாகவும், அது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முறைப்படி கோரிக்கை அனுப்ப உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# உணவகத்தின் மீது துப்பாக்கிச் சூடு

கனடாவின் டொரண்டோ நகரில் உள்ள தி எனெக்ஸ் பகுதியில் அமைந்துள்ள ஒரு உணவகத்தின் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் பெட்ஃபோர்ட் மற்றும் டேவன்போர்ட் வீதிகளுக்கு அருகே செவ்வாய் இரவு 11:30 இற்கு முன்னர் நடந்ததாக கூறப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், துப்பாக்கிச் சூட்டின் சான்றுகளைக் கண்டதாகவும், உணவகத்தின் ஜன்னல்களில் குறைந்தபட்சம் எட்டு துளைகள் இருப்பதைக் காட்டும் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.



இந்த துப்பாக்கிச் சூட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், சந்தேகநபர் பற்றிய விவரங்கள் அல்லது சுட்டதற்கான காரணம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த உணவகத்தின் பெயர் வெளியிடப்படவில்லை. சம்பவத்தின் போது அந்த இடம் திறந்திருந்ததா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காட்டுத்தீ பேரழிவை சரிசெய்வதற்கு ட்ரோன்களை பயன்படுத்தும் கனடா





காட்டுத்தீயால் ஏற்பட்ட பேரழிவை சரிசெய்ய கனடா அரசாங்கம் ட்ரோன் களைப் பயன்படுத்தி வருகிறது.

2023 ஆம் ஆண்டு கனடாவில் இடம்பெற்ற பேரழிவான காட்டுத்தீ யால் மில்லியனக்கணக்கான ஹெக் டேர் வனங்கள் அழிந்தன.

குறிப்பாக, கியூபெக் மாநிலத்தின் வடக்கு பகுதி மிக அதிகமாக பாதிக் கப்பட்டது. இதனை எதிர்கொள்வதற் காக கனடா தற்போது ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மறுவனமாக்கலை மேற்கொள்கிறது.

Flash Forest எனும் நிறுவனம் முன் னெடுத்துள்ள இந்த திட்டத்தில், ட்ரோன்கள் மூலம் நாளொன்றிற்கு 50,000 விதைகள் கொண்ட காப்சூல்கள் மண்ணில் நறுக்கப்படுகின்றன.

இதில் நீர், ஊட்டச்சத்துகள் மற்றும் பூஞ்சைகள் சேர்க்கப்பட்டுள்ளதால், விதைகள் நன்றாக வளர வாய்ப்பு அதிகம் உள்ளது.

இந்த விதைகள் சாதாரணமாக மண் மீது வீசப்படுவதில்லை. முந் தைய காட்டுத்தீ தாக்கத்துக்குள்ளான பகுதிகள், காலநிலை மற்றும் நில அமைப்பு ஆகியவற்றை ஏ.ஐ. தொழில் நுட்பம் மூலமாக முன்பே கணக்கிட்டு, சரியான இடங்களில் விதைகள் தூவப்படுகின்றன.

இந்த முயற்சியில் Cree இனத்தினர் போன்ற மூலவர்களும் நேரடியாக பங்கேற்கின்றனர். "நம்முடைய வனங் கள் அழிந்துவிட்டது வருத்தமளிக்கி றது, ஆனால் இப்போது புதிய முறை யில் மீட்பு முயற்சி நடப்பது நம்மை மகிழ்விக்கிறது," என அந்த சமூகத் தின் தலைவி கூறியுள்ளார்.

இத்தகைய முயற்சிகள் வனங் களை மீண்டும் உயிர்ப்பிக்க வழிகாட் டுகின்றன. எனினும், விதை பற்றாக் குறை மற்றும் விதைகள் வீணாகும் சாத்தியம் போன்ற சவால்களும் உள்ளதாக வன உயிரியல் பேராசி ரியர்கள் எச்சரிக்கின்றனர்.



# மோதல் சம்பவத்தில் 2 பேர் உயிரிழப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் அபட்ஸ்போர்ட், பகு தியில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

அபட்ஸ்போர்ட் பொலிஸ் வெளி யிட்டுள்ள அறிக்கையில், மெக்கீ வீதியின் 36000 வட்டத்தில் உள்ள வீட்டில் வன்முறை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டுள்ளது.

அங்கு சென்ற பொலிஸார் வீட்டுக் குள் நுழைந்தபோது, இரண்டு பேர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர்.

இந்த சம்பவம் தனித்துவமானது என்றும் ஒரே வீட்டு வளாகத்துக்குள் மட்டுப்பட்ட ஒரு தனிப்பட்ட சம்பவம் என தற்போது சந்தேகிக் கப்படுவதாகவும் அதிகாரிகள் கூறி யுள்ளனர்.

இது பொதுமக்களின் பாதுகாப் பிற்கு எந்தவிதமான ஆபத்தையும் ஏற்படுத்தவில்லை என பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# காணாமல் போன நபர் சடலமாக மீட்கப்பட்டார்

ஒன்றாரியோவில் காணாமல் போனதாக கூறப்பட்ட மோட்டார் சைக்கிளோட்டியொருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கிளாரிங்டனில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வீதியோ ரத்தில் உயிரில்லாமல் கிடந்த மோட்டார் சைக்கிள் ஓட் டுநர் ஒருவரை கண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபரை அன்றைய தினம் காலை குடும்பத் தினர் காணவில்லை என புகார் செய்திருந்தனர் என டர்ஹம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில், அந்த நபர் கிழக்கு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது எதிரே வரும் பாதைக்கு திரும்பும் போது கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளிலிருந்து வீசி எறியப் பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்..

அந்த நபர் 47 வயதுடையவராகும். இவரது அடையாளம் இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை.



## டொரோண்டோவில்...

( C01 தொடர்ச்சி)

எது.

ஆனால் ஈரப்பதம் காரணமாக உணரப்படும் வெப்பநிலை 35 பாகை செல்சியஸ் வரை உயரக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மழையில்லா சூரிய ஒளியுடன் தொடங்கி, மதியம் 1 மணிக்கு புற ஊதாக்கதிர் குறியீடு 9 ஆக அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மிகவும் அதிகம் என வகைப் படுத்தப்படுகிறது, எனவே பொதுமக்கள் சூரியக் கதிர்வீச்சில் இருந்து பாது காப்பாக இருக்க அறிவுறுத்தப்படுகின் றனர்.

நாளை வெப்பநிலை சற்று குறை யும். அதாவது, வெள்ளிக்கிழமை 26 பாகை செல்சியஸ் ஆகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஆனால், வார இறுதியில் வெப்பம் மீண்டும் அதிகரிக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வெப்பநிலை 30 பாகை செல்சியஸ் வரை எட்டும் என தெரிகி றது. இரு நாள்களிலும் மழை பெய்வ தற்கான வாய்ப்பு 30 வீதமாக காணப்படு கின்றது என எதிர்வுகூறப்பட்டுள்ளது.